# தமிழ்

## அலகு 1 - உலாவரும் செயற்கைக்கோள்






1

உலாவரும் செயற்கைக்கோள்

சிறுபஞ்சமூலம்

கற்றல் விளைவுகள்

- படித்த சொற்களை நினைவுகூர்ந்து வருணனை, வினா, காலங்களை இணைத்துத் தொடர்களைக் கூறுவர்; படிப்பர்; எழுதுவர்; உருவாக்குவர்.
- தன்மை, முன்னிலை, படர்க்கை, ஒருமை, பன்மை, ஐம்பால் அறிந்து தொடர்களைக் கூறுவர்; படிப்பர்; எழுதுவர்; உருவாக்குவர்.

நாள் 1

நினைவுகள் மலரட்டும்

திறவுகோல் 1 பேசலாம்! எழுதலாம்!

**துணைக்கருவிகள்:** வானவி படம் (இணைப்பில் கொடுக்கப்பட்ட வானவியின் படத்தை வெட்டி எடுத்து அட்டையில் ஒட்டி மேடையில் நிறுத்தி வைக்கவும்.)

குழந்தைகளே! எனக்கு ஒரு புது நண்பர் அறிமுகமானார். அவர் ஒரு விண்வெளி மனிதர். அவர் பெயர் வானவி. ஒருநாள் பறக்கும் தட்டில் பறந்து கொண்டிருந்தாராம்; திடீரென்று பழுது ஏற்பட்டு பறக்கும்தட்டு கீழே விழுந்துவிட்டதாம்; பூமிக்கு வந்துவிட்டாராம்; அவரைப் பார்த்தபொழுது எனக்கு மிகவும் வியப்பாக இருந்தது. நான் அவரிடம் பேச முயற்சி செய்தேன்; நான் பேசியது முதலில் அவருக்குப் புரியவேயில்லை. ஆனாலும், நான் தொடர்ந்து முயற்சி செய்தேன். மெல்ல மெல்ல அவருக்குப் புரியத் தொடங்கியது; பிறகு அவர் ஒரு சில விதிகளைக் கூறினார். அந்த விதிகளைப் பயன்படுத்திப் பேசினாலும் எழுதினாலும் மட்டும் அவருக்கு எளிதில் புரிந்துவிடுகிறது. பிறகு, அவர் எனக்கு நல்ல நண்பராகிவிட்டார். அந்த விண்வெளி நண்பர், நம்முடைய வகுப்பறைக்கு வரவேண்டும் என்று ஆசைப்பட்டார்; நானும் அழைத்து வந்திருக்கிறேன். அவரிடம் பேசுவதற்கு சில விதிகள் உள்ளன. அதுபோலவே எழுவதற்கும் சில விதிகள் உள்ளன. அவற்றைப் பயன்படுத்திப் பேசினால், எழுதினால் மட்டும்தான் அவருக்குப் புரியும். நீங்களும் அந்த விதிகளைத் தெரிந்து கொள்ளுங்கள்.

ஆசிரியர் கையேடு 1

Animation Animation Animation

Video Scribe Video Scribe


Video Scribe

எண்ணும் எழுத்தும்

# தமிழ்

## அலகு 2 - மாசில்லாத உலகம் படைப்போம்



2

மாசில்லாத உலகம் படைப்போம்

வாரித் தந்த வள்ளல்

கற்றல் விளைவுகள்

- பண்பாடு/தொழில் தொடர்பான பல்வேறு சொற்களைப் பயன்படுத்துவர்.
- கேட்ட, படித்த சமூகம், நகைச்சுவை, வீரச்செயல்கள் குறித்துப் பேசவும் வினாக்கள் எழுப்பவும் தங்களின் கருத்தை வெளிப்படுத்தவும் செய்வர்.
- கொடுக்கப்பட்டுள்ள பாடப்பகுதியின் கருத்தைப் படித்துப் பொருள்புரிந்து கொள்வர்; சார்ந்த வினாக்களுக்கு விடையளிப்பர்.
- கொடுக்கப்பட்டுள்ள பாடப்பகுதியைப் புரிந்துகொண்டு நாடகவடிவில் வெளிப்படுத்துவர்; நாடகக் கதைப்பாத்திரத்திற்கு ஏற்ப, குரல் ஏற்றஇறக்கத்துடன் பேசுவர்.
- ஒரு தலைப்பு சார்ந்து கருத்துகளைத் தொகுத்துக் கட்டுரை எழுதுவர்.
- எளிய படவிளக்கங்கள், எண் விவர அறிவிப்புகள், வரைபடங்கள் ஆகியவற்றைப் படிப்பர்; பொருள் உணர்வர்.

N3X7B

இதுவரை கற்றவை

- வினாத்தொடர்களை உருவாக்கவும் பயன்படுத்தவும் முற்படுவர்.

நாள் 1

தமிழோடு விளையாடு

கேட்போம்! கேட்போம்!

- குழந்தைகளை வட்டமாக அமரச் செய்யுங்கள்.
- யாரேனும் ஒரு குழந்தையிடம், " இன்று காலையில் என்ன சாப்பிட்டாய்?" என்று கேளுங்கள்.
- குழந்தை கூறும் விடையைக் கரும்பலகையில் எழுதுங்கள்.

18 ஆசிரியர் கையேடு

Animation


Animation

Video Scribe

# தமிழ்

## அலகு 3 - காட்டுக்குள்ளே பாட்டுப் போட்டி



3 காட்டுக்குள்ளே பாட்டுப் போட்டி

தலைமைப் பண்பு

கற்றல் விளைவுகள்

- நூல்களைத் தெரிவுசெய்து படிக்க ஆர்வமுடன் முன்வருவர். உணர்வுப்பூர்வ சிக்கல்களை (பாட/துணைப்பாடப் பகுதிகளில் உள்ள) எழுத்துவடிவில் வெளிப்படுத்துவர்.
- பாடப்பகுதியைப் படித்துப் பொருள் புரிந்துகொள்வர். பொம்மலாட்டமாக வெளிப்படுத்துவர். அது சார்ந்து சிந்திப்பர்; பேசுவர். இவை போன்ற கதைகளைத் தேடிப் படிக்க முயற்சி செய்வர்.
- குறிப்புகளைப் பயன்படுத்தி, சொந்தநடையில் கதைகள் எழுதுவர்.

KFP06

இதுவரை கற்றவை

- எதிர்ச்சொற்களை அடையாளம் கண்டு பயன்படுத்துவர்.

நாள் 1

தமிழோடு விளையாடு

- குழந்தைகளிடம் 'நான் இப்போது ஒரு செயலைச் செய்வேன். நீங்கள் அதற்குரிய எதிர்ப்பொருள் தரக்கூடிய செயலைச் செய்ய வேண்டும்' என்று கூறுங்கள்.

எ.கா. 'சிறிய' என்ற சொல்லை உணர்த்துவது போன்று கைகளைக் குறுக்கிக் காட்ட வேண்டும்.

அதற்குக் குழந்தைகள் 'பெரிய' என்ற சொல்லை உணர்த்துவது போன்று கைகளை விரித்துக் காட்ட வேண்டும்.

குழந்தைகள் சரியாகச் செய்தால் பாராட்டுங்கள்; அல்லது குறிப்புகள் கொடுத்து செய்யக்கூறுங்கள்.

- நீங்கள் செய்த செயலுக்குரிய 'சிறிய' என்ற சொல்லையும் அதற்கு எதிராகக் குழந்தைகள் செய்துகாட்டிய செயலுக்குரிய 'பெரிய' என்ற சொல்லையும் கரும்பலகையில் பின்வருமாறு எழுதுங்கள்.

சிறிய × பெரிய


34 ஆசிரியர் கையேடு


Video Scribe

Training Ppt

# English

# Module 1 - We can do it!



1 We can do it!

WQD3B

## Learning outcomes

| CLASS - 4 | CLASS - 5 |
|---|---|
| By the end of the module, students will be able to | |
| listen to a story and respond verbally/in writing. | listen to a story and respond verbally/in writing. |
| read and write level-based simple sentences with comprehension. | read and write level-based simple sentences with comprehension. |
| use familiar words with comprehension in simple sentences in speech and writing. | use familiar words with comprehension in simple sentences in speech and writing. |
| use homophones in speech and writing with comprehension. | use homophones in speech and writing with comprehension. |
| **Unit:** The Seven Seeds | **Unit:** Five Detectives |

**Greetings!**

Say, Good morning!

Tell students to stand in a line. Let each one come forward and say, Good morning. Greet them with a peacock dance.

Let students practise the same throughout the module.

Where did you go during summer holidays? Did you meet your friends there? Ask, Are you happy to come to school? Ask, Shall we start our class with a game? Do you like to play games?



**Word race**



Ask the class to stand in a big circle. Tell them, We will play word race. Say a word e.g. food. Then point to a student in the circle and ask him / her to say a word that starts with the last letter e.g. d – door. Prompt the next student to say a word that starts with the last letter r (the last letter of the word door). Continue until all students get a chance.



1

Story Audio Animation Story Audio

Classroom Video Classroom Video


Video Scribe Video Scribe


Video Shorts Video Shorts

எண்ணும் எழுத்தும்

# English

# Module 2 - Be Honest! Be Smart!



## 2 Be Honest! Be Smart!

DQ9KN

### Learning outcomes

| CLASS - 4 | CLASS - 5 |
|---|---|
| By the end of the module, students will be able to | |
| recite a poem with appropriate expressions and intonations. | recite a poem with appropriate expressions and intonations. |
| identify, read and write the rhyming words from the poem. | identify, read and write the rhyming words from the poem. |
| use articles a, an and the in speech and writing with comprehension. | use articles a, an and the in speech and writing with comprehension. |
| use adjectives and pronouns in speech and writing with comprehension. | use adjectives and pronouns in speech and writing with comprehension. |
| **Unit:** Be Honest | **Unit:** Why! Why! Why! |

**Greetings!**

Say, Good morning!

Encourage students to walk in a circle and greet Hello, Happy morning by shaking the hands of the students next to them. Let students practise the same greetings throughout the module.

Good Morning!

**I can draw**

Fun with English

Invite a student to the middle of the circle. Now whisper a word (e.g. star) in the student's ear. Then encourage the student to draw it on the blackboard. Let the class guess what it is and say aloud the word star. Now, encourage the student who has drawn on the blackboard to say, It is a star. We can see it in the sky. It shines in the night. Continue the activity until a few more words are drawn and identified. (sun, tree, river, moon, cloud)

It is a star.
We can see it in the sky.
It shines in the night.

16


Classroom Video


Training Video Scribe

எண்ணும் எழுத்தும்

# English

# Module 4 - Everyone is Important!



## 4 Everyone is Important!

P2Y85

### Learning outcomes

| CLASS - 4 | CLASS - 5 |
|---|---|
| By the end of the module, students will be able to | |
| listen to a story and respond to comprehension questions orally. | listen to a story and respond to comprehension questions orally. |
| read level based simple sentences with comprehension. | read level based simple sentences with comprehension. |
| use familiar words with comprehension in simple sentences in speech and writing. | use familiar words with comprehension in simple sentences in speech and writing. |
| associate the names of animals with their young ones and their cries. | associate the names of animals with their young ones and their cries. |
| identify the characters and sequence the events in a story. | identify the characters and sequence the events in a story. |
| **Unit:** Bala Spins Magic | **Unit:** The Cracked Coffee Cup |

**Greetings!**

Say, Good morning!

Ask students to stand in two separate lines facing the black board. When you say meet each other, the students in parallel lines must face each other and shake their hands by saying Hi, have a great day!

Repeat the greetings throughout the module.

Good Morning!

Fun with English

**Who are you?**

Bring students out of the classroom. Ask students to point to themselves and say I. Then ask them to stand in pairs and say We. Ask them to point to each other and say You. Ask them to point to other pairs and say They. Practise it a few times.

I We You They

33


[Story Audio](#)

[Training Ppt](#)

[Training Ppt](#)

# English

# Module 6 - We can do it!




## 1 We can do it!

### Learning outcomes

| CLASS - 4 | CLASS - 5 |
|---|---|
| By the end of the module, students will be able to | |
| listen to a story and respond verbally/in writing. | listen to a story and respond verbally/in writing. |
| read and write level-based simple sentences with comprehension. | read and write level-based simple sentences with comprehension. |
| use familiar words with comprehension in simple sentences in speech and writing. | use familiar words with comprehension in simple sentences in speech and writing. |
| use homophones in speech and writing with comprehension. | use homophones in speech and writing with comprehension. |
| **Unit:** The Seven Seeds | **Unit:** Five Detectives |

**Greetings!**

Say, Good morning!

Tell students to stand in a line. Let each one come forward and say, Good morning. Greet them with a peacock dance.

Let students practise the same throughout the module.

Where did you go during summer holidays? Did you meet your friends there? Ask, Are you happy to come to school? Ask, Shall we start our class with a game? Do you like to play games?




### Word race




Ask the class to stand in a big circle. Tell them, We will play word race. Say a word e.g. food. Then point to a student in the circle and ask him / her to say a word that starts with the last letter e.g. d – door. Prompt the next student to say a word that starts with the last letter r (the last letter of the word door). Continue until all students get a chance.






Classroom Video

Teacher Champions

Student Champions

# கணக்கு

## அலகு 1 - வடிவியல்



தமிழ்நாடு அரசு

எண்ணும் எழுத்தும்

வகுப்புகள்: 4 & 5

ஆசிரியர் கையேடு

கணக்கு

பருவம் – III

2023– 2024

பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்



1 வடிவியல்

XQORD

கற்றல் விளைவுகள்

| நான்காம் வகுப்பு | ஐந்தாம் வகுப்பு |
|---|---|
| நாற்கரத்தின் சுற்றளவு கண்டறிவதை நினைவு கூர்வர். | சதுரம் மற்றும் செவ்வகத்தின் சுற்றளவை வாய்ப்பாட்டைப் பயன்படுத்திக் கண்டறிவர். சதுரம் மற்றும் செவ்வகத்தின் பரப்பளவை வாய்ப்பாட்டைப் பயன்படுத்திக் கண்டறிவர். |
| பாடநூல் பக்க எண் - | பாடநூல் பக்க எண் 1-10 |

இதுவரை கற்றவை

நாற்கரம், நாற்கரத்தின் சுற்றளவு — J6FDW — நாற்கரம், நாற்கரத்தின் சுற்றளவு

செயல்பாடு 1

நாற்கரத்தின் சுற்றளவு

தேவையான பொருள்கள் : ஒவ்வொரு அளவிலும் 10 குச்சிகள் வீதம் 4 அளவுகளில் தென்னங்குச்சிகள் (எ.கா: 5 செ.மீ, 7 செ.மீ, 9 செ.மீ மற்றும் 11 செ.மீ)

நுழையும் முன்

மாணவர்களை இரண்டு குழுக்களாகப் பிரிக்க வேண்டும். ஒவ்வொரு நீளத்திலும் 5 குச்சிகள் வீதம் ஒவ்வொரு குழுவிற்கும் 20 தென்னங்குச்சிகள் வழங்க வேண்டும். அவற்றைக் கொண்டு 5 வெவ்வேறு நாற்கரங்களை உருவாக்கச் செய்ய வேண்டும். பின்னர் ஒவ்வொரு

1

[Video Scribe](#) [Video Scribe](#)

[Video Scribe](#) [Classroom Video](#)

[Training Video Scribe](#)

# கணக்கு

## அலகு 2 - எண்கள்

தமிழ்நாடு அரசு

எண்ணும் எழுத்தும்

**வகுப்புகள்: 4 & 5**

**ஆசிரியர் கையேடு**

**கணக்கு**

பருவம் – III

2023– 2024

**பள்ளிக் கல்வித்துறை**

தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

### 2 எண்கள்

INY7AE

**கற்றல் விளைவுகள்**

**நான்காம் வகுப்பு**

- 10 மற்றும் 100 ன் மடங்குகளை மனதால் கூட்டியும் கழித்தும் தீர்வு காண்பர்.
- ஈரிலக்கப் பெருக்கும் எண்ணை விரிவாக்கம் செய்து, பெருக்கப்படும் எண்ணுடன் பெருக்கித் தீர்வு காண்பர்.
- மூன்றிலக்க மற்றும் நான்கிலக்க எண்களை ஓரிலக்க எண்ணால் வகுத்துத் தீர்வு காண்பர்.
- நான்கு அடிப்படைச் செயல்பாடுகளை வாழ்வியல் கணக்குகளுக்குப் பயன்படுத்தித் தீர்வு காண்பர்.
- எண்களை அருகிலுள்ள 10 அல்லது 100 க்கு முழுமைப்படுத்தித் தோராயப்படுத்துவர்.
- எண்களை அருகிலுள்ள 10 க்கு முழுமைப்படுத்தித் தோராயப்படுத்துவதன் மூலம் நான்கு அடிப்படை செயல்பாடுகளில் உண்மை மதிப்பு மற்றும் தோராய மதிப்பிற்கிடையே உள்ள தொடர்பைக் கண்டறிவர்.

பாடநூல் பக்க எண் 5-18

**ஐந்தாம் வகுப்பு**

- எண் வரிசைகளை அறிந்து உருவாக்குவர்.
- ஆங்கில அகர வரிசைக்கு 1,2,3 என வரிசை எண்களைத் தொடர்புபடுத்தித் தீர்வு காண்பர்.
- நான்கிலக்க எண்ணை விரிவாக்கம் செய்து வகுத்துத் தீர்வு காண்பர்.
- எண்களை அருகிலுள்ள 10 அல்லது 100 க்கு முழுமைப்படுத்தித் தோராயப்படுத்துவர்.
- எண்களை அருகிலுள்ள 10 க்கு முழுமைப்படுத்தித் தோராயப்படுத்துவதன் மூலம் நான்கு அடிப்படை செயல்பாடுகளில் உண்மை மதிப்பு மற்றும் தோராய மதிப்பிற்கிடையே உள்ள தொடர்பைக் கண்டறிவர்.

பாடநூல் பக்க எண் 11-20

**இதுவரை கற்றவை**

எண்கள் கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல்.

QL9MX

எண்கள் கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல், முழுமைப்படுத்துதல்.



Video Scribe

Video Scribe

Training Ppt

Training Ppt

Training Ppt

# அறிவியல்

## அலகு 1 - பசுமை சுற்றுச்சூழல்

தமிழ்நாடு அரசு

எண்ணும் எழுத்தும்

# அறிவியல்

வகுப்புகள்: 4 & 5

## ஆசிரியர் கையேடு

பருவம் – 3

2023–2024

**பள்ளிக் கல்வித்துறை**

தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்



## 1 பசுமை சுற்றுச்சூழல்



**கற்றல் விளைவுகள்**

- கழிவு மேலாண்மையின் முக்கியத்துவம், படிநிலைகள் மற்றும் 3R பற்றி அறிந்து விளக்குவர்.
- கழிவுகளை வகைப்படுத்துவர்.
- கழிவுப் பொருள்களை மறுபயன்பாடு செய்து பயனுள்ள பொருள்களை உருவாக்குவர்.

**முன் தயாரிப்பு** | அலகு 1 – பசுமை சுற்றுச்சூழல் | செயல்பாடு – 1 | கழிவு மேலாண்மை

1. உங்கள் வீட்டில் எத்தனை வகையான குப்பைத் தொட்டிகள் வைத்துள்ளீர்கள்?
2. உங்கள் வீட்டில் எதையெல்லாம் இந்தக் குப்பைத் தொட்டிகளில் போடுவார்கள்?
3. குப்பைத் தொட்டிகளில் சேர்ந்த கழிவுகளை என்ன செய்வார்கள்?
4. நீங்கள் வசிக்கும் தெருவில் வைக்கப்பட்டுள்ள குப்பைத் தொட்டிகளின் நிறங்கள் என்னென்ன?

என்பது போன்ற வினாக்களை மாணவர்களிடம் கேட்டு அதற்கான பதில்களை உற்றுநோக்கியும் அவர்கள் வீட்டில் உள்ள பெரியவர்களிடம் கேட்டும் சேகரித்து வருமாறு கூறவும்.

**ஆஹா அறிவியல்**

### நீர் கலந்த பாலா? நீர் கலக்காத பாலா?

**தேவையான பொருள்கள்**

நீர் கலக்காத பால், நீர் கலந்த பால், இருவேறு வண்ணக் குவளைகள், மை நிரப்பிகள் – 2 மற்றும் எழுதுபலகை (Slate).

ஆசிரியர் ஒரு வண்ணக் குவளையில் நீர் கலந்த பாலையும் மற்றொரு வண்ணக் குவளையில் நீர் கலக்காத பாலையும் எடுத்து மேசையின் மீது வைக்க வேண்டும்.

மாணவர்களை மேசையைச் சுற்றி அரை வட்ட வடிவில் நிற்க வைத்து "மேசையின் மீது வைத்துள்ள இரண்டு குவளைகளில் எது நீர் கலக்காத பால்? எது நீர் கலந்த பால்? என்பதைக் கண்டுபிடிக்கலாமா? எனக்கூறி இரு மாணவர்களை அழைக்கவும். ஒரு மாணவரை ஒரு வண்ணக்குவளையில் இருந்து பாலை மை நிரப்பியில் நிரப்பச் சொல்லவும். மற்றொரு மாணவரை அடுத்த வண்ணக் குவளையில் உள்ள பாலை மை நிரப்பியில் நிரப்பச் சொல்லவும்.

ஆசிரியர் தொடங்கலாம் எனக் கூறியவுடன் இருவரையும் ஒரே சமயத்தில் பாலைச் சொட்டு சொட்டாக படத்தில் காட்டியுள்ளவாறு எழுதுபலகையில் விடச் சொல்லவும். இப்போது மற்ற மாணவர்களை என்ன நடக்கிறது? என்பதை உற்று நோக்கச் சொல்ல வேண்டும்.





[Video](#) [Video](#) [Video](#) [Video](#) [Video](#)

[Classroom Video](#) [Video](#) [Classroom Video](#)

[Video Scribe](#) [Video Scribe](#) [Video Scribe](#)

எண்ணும் எழுத்தும்

# அறிவியல்

## அலகு 2 - விலங்குகளின் வாழ்க்கை


தமிழ்நாடு அரசு

எண்ணும் எழுத்தும்

அறிவியல்

வகுப்புகள்: 4 & 5


ஆசிரியர் கையேடு

பருவம் – 3

2023–2024

பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்


2 விலங்குகளின் வாழ்க்கை

YX2OA

கற்றல் விளைவுகள்

- விலங்குகளின் குழு நடத்தை பற்றிப் புரிந்து விவரிப்பர்.
- விலங்குகள் மற்றும் பறவைகளின் தகவமைப்பினை அறிந்து விளக்குவர்.
- சில விலங்குகளின் சிறப்புப் புலன் உணர்வுகள் பற்றி அறிந்து விளக்குவர்.
- இரவில் இரை தேடும் விலங்குகள் மற்றும் பகலில் இரை தேடும் விலங்குகள் பற்றிப் புரிந்து அடையாளம் காண்பர்.
- மனிதர்கள் மற்றும் விலங்குகளில் பெற்றோர் பராமரிப்பு பற்றி அறிந்து விளக்குவர்.

செயல்பாடு : 4

கூடி வாழ்வோம்!

தேவையான பொருள்கள்

திறன்பேசி அல்லது பின்னிணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள பட அட்டைகள்.

ஆசிரியர் மாணவர்களிடம்

- உங்கள் குடும்பத்தில் உள்ள உறுப்பினர்கள் எத்தனை பேர்?
- யார் யாரெல்லாம் வேலைக்குச் செல்கிறார்கள்?
- யார் உணவு சமைப்பார்கள்?
- வீட்டிற்குத் தேவையான பொருள்களை வாங்கி வருபவர் யார்?
- குடும்பத்தில் உள்ள வேலைகளை நீ உன் சகோதர, சகோதரிகளுடன் எவ்வாறு பகிர்ந்து கொள்கிறாய்?
- நீ தனியாக இருந்தால் பாதுகாப்பாக உணர்வாயா?
- குடும்பத்துடன் இருந்தால் பாதுகாப்பாக உணர்வாயா?

போன்ற வினாக்களைக் கேட்டுக் கலந்துரையாடவும்.

தொடர்ந்து ஆசிரியர் மாணவர்களிடம் அவர்கள் பறவைகளை உற்றுநோக்கி அறிந்து வந்ததை ஒவ்வொருவராகக் கூறச் சொல்லவும். மாணவர்கள் கூறும்போது அவர்கள் வியந்து பார்த்த காட்சிகள் குறித்துக் கலந்துரையாடவும்.

பின்னர், மாணவர்களின் பதில்களுக்குப் பின்னர் "நாம் எப்படிக் கூடி வாழ்கிறோமோ அதைப் போலவே விலங்குகளும் கூடி வாழ்கின்றன. அதைப்பற்றிக் காண்போமா?" எனக்கேட்டு காணொலியை மாணவர்களிடம் காண்பிக்க வேண்டும்.

9 ஆசிரியர் கையேடு

[Video](#) [Video](#) [Video](#)

[Classroom Video](#) [Animation](#)

[Training Video Scribe](#) [Training Ppt](#)

# சமூக அறிவியல்

## அலகு 1 - கோட்டைகளும் அரண்மனைகளும்

தமிழ்நாடு அரசு

எண்ணும் எழுத்தும்

**அறிவியல்**

வகுப்புகள்: 4 & 5

**ஆசிரியர் கையேடு**

பருவம் – 3

2023–2024

**பள்ளிக் கல்வித்துறை**

தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

### 1 கோட்டைகளும் அரண்மனைகளும்

**கற்றல் விளைவுகள்**

- தமிழ்நாட்டிலுள்ள கோட்டைகள் மற்றும் அரண்மனைகளின் பெயர்களைக் கூறி, அவற்றின் வரலாற்றை விவரிப்பர்.

7X30J

### கோட்டைகள்

செயல்பாடு 1

**காலச்சுவடி**

**புனித ஜார்ஜ் கோட்டை**



கூவம் ஆற்றுக்கும் வங்காள விரிகுடா கடலுக்கும் இடையே உள்ள மணற்பாங்கான இடத்தில் மண் சுவர்களால் கட்டப்பட்டக் கோட்டையாகும். ஆங்கிலேயத் தளபதி சர் பிரான்சிஸ் டே தலைமையில் புனித ஜார்ஜ் நாளில் இக்கோட்டையின் பெரும்பகுதி கட்டி முடிக்கப்பட்டது. இதனால் இந்தக் கோட்டை புனித ஜார்ஜ் கோட்டை எனப் பெயர் பெற்றது. இந்தியாவின் மிக உயரமான கொடிக்கம்பம் புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ளது. இந்தியாவின் முதல் மருத்துவமனை 1664 இல் புனித ஜார்ஜ் கோட்டையில் ஆரம்பிக்கப்பட்டது.

**தேவையான பொருள்கள்:** பின்னிணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள படங்கள், குறிப்புகள்.



Animation | Animation | Animation | Animation

Video | Video | Video

Classroom Video | Classroom Video | Classroom Video

Video Scribe | Video Scribe

Training Video | Training Video Scribe | Training Ppt